2021 ஆகஸ்ட் 16] [பேரவைத் தலைவர்]

செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. ஸ்டேன் சுவாமி என்று அழைக்கப்படும் திரு. ஸ்டான்லிஸ்லாஸ் லூர்துசாமி அவர்கள் சமூகத் தொண்டாற்றுவதில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் அவர்களது மேம்பாட்டிற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அன்னாரது மறைவால், அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) அய்யா இளங்குமரனார், தமிழறிஞர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த முதுபெரும் அறிஞரான அய்யா இளங்குமரனார் அவர்கள், 26-7-2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இலக்கணச் செழுமையும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழியை, பண்பாட்டை தமிழர்களின் இல்லங்கள்தோறும் நிலைநிறுத்திட தொடர்ந்து பணியாற்றியவர். பழந்தமிழர் வாழ்வியல் அடிப்படையில், உடல் நலன் காக்கும் முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து, அவற்றை இன்றைய இளைஞர்களும் பின்பற்றும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சான்றோர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(உ) மதுரை ஆதீன பீடாதிபதி திரு. அருணகிரிநாதர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மதுரை ஆதீனம் திரு. அருணகிரிநாதர் அவர்கள் 13-8-2021 அன்று உடல் நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தமிழகத்தின் தொன்மையான சைவத் திருமடங்களில் ஒன்றான மதுரை ஆதீனத்தின் 292-வது பீடாதிபதியான

திரு. அருணகிரிநாதர் அவர்கள் சைவ சித்தாந்தத்தைப் பரப்பும் ஆன்மிகப் பணியில் அருந்தொண்டாற்றியவர். அவர், பல்வேறு மக்கள் சார்ந்த பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அனைவரின் பேரன்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் ஆன்மிகப் பெருமக்களுக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10-10

3. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் இலக்கினை எய்திடும் வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் திருத்திய நிதிநிலை அறிக்கை, 2021–2022 (தமிழ் மற்றும் ஆங்கிலம்), வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021–2022 (தமிழ் மற்றும் ஆங்கிலம்), நிதிநிலை அறிக்கை தொடர்பான ஏனைய ஆவணங்கள், நிகழ்ச்சி நிரல் ஆகியன பதிவேற்றம் மற்றும் அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் (அ மற்றும் ஆ) இடம்பெறும் ஆவணங்கள் அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை எய்திட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை